வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி 11.09.2024 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

உலகின் செமி கண்டக்டர் கேந்திரமாக மேம்பட, இந்தியா அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பசுமை ஹைட்ரஜன் மூலம் கார்பன் வெளியீட்டைக் குறைப்பதில், சர்வதேசக் கூட்டாண்மை அவசியம் என்றும் பிரதமர் வலியுறுத்தி உள்ளார்.

மத்திய மீன்வளத் துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங், இன்று புதுடெல்லியில், மீனவர் நலனுக்கான, பிரதமரின் மத்ஸ்ய கிசான் சம்ரித்தி சஹ யோஜனா திட்டத்தை தொடக்கி வைத்தார்.

பாரதியார் நினைவு நாளான இன்று புதுச்சேரியில், அன்னாரின் சிலைக்கு, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி உள்ளிட்டோர், அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

-----------------------

*மோடி-செமிகான் 1 (18)*

உலக அளவில் தற்போது, சிலிக்கான் தூதாண்மை யுகம் நடப்பதாகவும், உலகின் செமி கண்டக்டர் கேந்திரமாக மேம்பட, இந்தியா அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று கிரேட்டர் நொய்டாவில், செமி கண்டக்டர் துறை பற்றிய

செமிகான் இண்டியா மாநாட்டை தொடக்கி வைத்து பேசிய அவர், இந்தியாவில், கணிப்பொறிச் சில்லுகளின் உற்பத்தியை அதிகரிக்கவும், உலகின் ஒவ்வொரு மின்னணு சாதனத்திலும், இந்தியக் கணிப்பொறிச் சில்லுகள் இடம் பெறுவதை உறுதிப்படுத்தவும், இந்தியா முயன்று வருவதாகக் கூறினார்.

நாட்டின் மின்னணு உற்பத்தித் துறையை, நடப்பு பத்தாண்டுகளின் இறுதிக்குள், 500 பில்லியன் டாலர் துறையாக மேம்படுத்த, அரசு, இலக்கு நிர்ணயித்து இருப்பதாகவும், இதனால் 60 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் பிரதமர் தெரிவித்தார். டிஜிட்டல் இண்டியா திட்டத்தின் வெற்றியினால் நாட்டில், பலதரப்பட்ட நன்மைகள் ஏற்பட்டு வருவதாகவும், முன்பு மொபைல் ஃபோன்களை, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வந்த இந்தியா, தற்போது, உலகின் 2ஆவது மிகப் பெரிய கைபேசி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நாடாக மேம்பட்டுள்ளதாகவும் கூறினார்.

மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், டிஜிட்டல் இண்டியா திட்டத்தின்

*மோடி-செமிகான் 2 (7)*

மூலம், அரசு, நவீன தொழில்நுட்பங்களை மக்களின் கைகளுக்கே கொண்டு வந்து இருப்பதாக கூறினார். செமி கண்டக்டர் துறையின் வளர்ச்சியினால், இந்நிலை இன்னும் மேம்படும் என்று அவர் தெரிவித்தார்.

செமிகான் இண்டியா மாநாட்டில், உலகின் முன்னணி செமி கண்டக்டர் உற்பத்தி நிறுவனங்களின் உயர்நிலைத் தலைவர்களும், நிபுணர்களும்

பங்கேற்கிறார்கள். மாநாட்டை ஒட்டி ஏற்பாடு செய்யப் பட்டுள்ள கண்காட்சியில், 250 நிறுவனங்கள், அரங்குகளை அமைத்துள்ளன.

-----------------------

மோடி-பசுமை ஹைட்ரஜன் 1 (18)

பருவநிலை மாற்றமும், புதிய எரிசக்தி ஆதாரங்களுக்கு மாறுவதுமே, இன்றைய உலகின் முக்கியக் கவலைகள் என்றும், பசுமை ஹைட்ரஜன் மூலம் கார்பன் வெளியீட்டைக் குறைப்பதில், சர்வதேசக் கூட்டாண்மை அவசியம் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், பசுமை ஹைட்ரஜன் பற்றிய இந்தியாவின் 2ஆவது சர்வதேச மாநாட்டில், மெய்நிகர் முறையில் உரையாற்றிய அவர், உலக நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு மூலமாகவே, பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியை அதிகரித்து, உற்பத்திச் செலவை குறைக்க முடியும் என்றார். பசுமை எரிபொருள் பயன்பாடு பற்றிய, ஜி-20 நாடுகளின் பாரீஸ் ஒப்பந்த இலக்குகளை நிறைவேற்றுவதில், இந்தியா முதல் நாடாக திகழ்வதையும், இந்த இலக்குகள், திட்டமிட்ட காலத்திற்கு 9 ஆண்டுகள் முன்பாகவே எட்டப் பட்டுள்ளதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

புதை படிவம் அல்லாத இந்தியாவின் எரிசக்தி உற்பத்தித் திறன், கடந்த 10 ஆண்டுகளில், 300 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாக பிரதமர் தெரிவித்தார். குறிப்பாக, சூரிய சக்தி மூலமான நாட்டின் மின்சார உற்பத்தித் திறன், 3 ஆயிரம் சதவிகித அளவிற்கு, உயர்ந்துள்ள நிலையில், இந்த சாதனை போதும் என இந்தியா விட்டு விடாது என்றும், ஏற்கனவே உள்ள எரிசக்தித் தீர்வுகளுக்கு

அப்பாற்பட்டு, புதிய-புதுமையான தீர்வுகளை இந்தியா ஆராய்ந்து வருவதாகவும், அவர் கூறினார். இதன் ஒரு பகுதியாகவே, பசுமை ஹைட்ரஜன்

*மோடி-பசுமை ஹைட்ரஜன்* 2 (5)

உற்பத்தி மீது இந்தியா கவனம் செலுத்தி வருவதாகவும், இதற்கென தேசிய அளவிலான இயக்கம், ஏற்கனவே தொடக்கப் பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி, பயன்பாடு, மற்றும், ஏற்றுமதியில், உலகக் கேந்திரமாக இந்தியாவை மேம்படுத்துவதே, அரசின் நோக்கம் என்று, பிரதமர் மேலும் கூறினார்.

-----------------------

*பிரல்ஹாத் ஜோஷி* (6)

புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறைக்கான மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி இம்மாநாட்டில் பேசுகையில், எரிசக்தித் துறையில் நாடு சுயசார்பை எட்ட, பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மிக அவசியம் என வலியுறுத்தினார். பசுமை எரிபொருள் உற்பத்தியால், நாட்டிற்கு, 8 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் கிடைக்கும் என்றும், 6 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

-----------------------

*கிரண் ரிஜிஜூ (19)*

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, தமது அமைச்சகத்தின் 100 நாள் சாதனைகளின் ஒருபகுதியாக, 6 முக்கிய முன்

முயற்சிகளை இன்று தொடக்கி வைத்தார். நேவா என்னும் தேசிய இ-விதான் செயலியின் 2ஆம் பதிப்பு, நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக்களுக்கான நிர்வாக முறை, தேசிய இளையோர் நாடாளுமன்ற செயல்பாடுகளுக்கான இணைய தளத்தின் புதிய வடிவம் ஆகியன, இதில் அடங்கும்.

தரம் உயர்த்தப்பட்ட இ-விதான் செயலியில், மாநில அரசுகளின் சட்டமியற்றும் நடைமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான வசதிகளும், காகிதமற்ற நடைமுறைகள் மூலம், முடிவெடுக்கும் பணிகளை மேம்படுத்துவதற்கான அம்சங்களும் இடம்பெற்றுள்ளன. அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளின் மாணவர்கள் மட்டுமின்றி, அனைத்து மக்களும் பங்கேற்கும் வகையிலான வசதிகள், தேசிய இளையோர் நாடாளுமன்ற இணைய தளத்தில் சேர்ககப் பட்டுள்ளன.

நாடாளுமன்ற இரு அவைகளின் ஆக்கப்பூர்வ செயல்பாடுகளை விட, நாடாளுமன்ற அலுவல்கள் தடைபடுவது பற்றிய செய்திகளுக்கே, ஊடகங்கள் முக்கியத்தும் அளிப்பதாக, அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார். நாடாளுமன்ற அலுவல்கள் 5 நிமிடம் தடைபட்டால் அதை செய்தியாக்கும் ஊடகங்கள், இரு அவைகளும் இரவு வெகுநேரம் வரை அமர்வு நடத்துவதை கண்டு கொள்வதில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

---------------------

*முர்மு-விருது* (5)

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் இன்று நடைபெற்ற விழாவில், சமுதாயத்திற்கு சிறப்பாக சேவை புரிந்த செவிலியர்களுக்கான, தேசிய ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகளை வழங்கி சிறப்பித்தார். மத்திய சுகாதார அமைச்சத்தின் இந்த விருது, 1973 முதல், ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

-----------------------

*மீன்வளம்* 1 (16)

மத்திய கால்நடை பராமரிப்பு, பால்வளம், மற்றும், மீன்வளத் துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங், இன்று புதுடெல்லியில், மீனவர் நலனுக்கான, பிரதமரின் மத்ஸ்ய கிசான் சம்ரித்தி சஹ யோஜனா திட்டத்தை தொடக்கி வைத்தார். மீன்வளத் துறையை, அமைப்பு சார்ந்த துறையாக மேம்படுத்தும் நோக்கத்திலான இந்த டிஜிட்டல் வசதியில், இயன்றவரை அதிக எண்ணிக்கையில் மீனவர்களை சேர்க்க, அனைத்து மாநில,மற்றும், யூனியன் பிரதேச அரசுகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரதமரின் மத்ஸ்ய சம்பதா திட்டத்தின் 4ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் பேசுகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையில், மீன்வளத் துறையில், கட்டமைப்பு வசதிகளும், தொழில்நுட்பங்களின் பயன்பாடும் அதிகரித்து, உற்பத்தி உயர்ந்து இருப்பதாக கூறினார். மீன்வளத் துறையில் ஆண்டுக்கு 60 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு

செய்யப் படுவதாகவும், இந்தியா, உலகின் 120 நாடுகளுக்கு மீன் ஏற்றுமதி செய்வதாகவும் அவர் தெரிவித்தார். மீன் உற்பத்தியில், உலகின் 2ஆவது பெரிய நாடாக தற்போது உள்ள இந்தியா, விரைவிலேயே முதல் இடத்தை பிடிக்கும் என்றும், அமைச்சர் குறிப்பிட்டார்.

*மீன்வளம்* 2 (7)

மீன்வளத் துறையில், ட்ரோன் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கான முன்னோடித் திட்டம் ஒன்றையும், தொகுப்பான மீன் பதனீட்டுப் பிரிவுகளை அமைப்பது குறித்த, நிலையான செயல்பாட்டு நெறிமுறைகளையும், நிகழ்ச்சியின் போது அவர் வெளியிட்டார். இணையமைச்சர்கள் எஸ்பி. சிங் பகேல், திரு. ஜார்ஜ் குரியன், பல்வேறு மாநில அரசுகளின் மீன்வளத் துறை பிரதிநிதிகள், மற்றும், திட்ட பயனாளிகள் பலரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

-----------------------

*பாரதியார்* (12)

புதுச்சேரியில், மகாகவி சுப்ரமணிய பாரதியார் நினைவு நாள், அரசு சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது. ராஜ்நிவாஸ் அருகே உள்ள பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், துணை சபாநாயகர் திரு. ராஜவேலு, அமைச்சர்கள் திரு. லட்சுமி நாராயணன்-திரு. திருமுருகன், அரசுக் கொறடா திரு. ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற

உறுப்பினர்கள் திரு. ரமேஷ், திரு. ராமலிங்கம் ஆகியோரும், பாரதியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் உள்ளிட்டோர், ஈஸ்வரன் கோவில் வீதியில் உள்ள பாரதியார் இல்லத்திலும், அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். பாரதியார் பயன்படுத்திய பொருட்கள் மற்றும் அவரது நூல்களை இவர்கள் பார்வையிட்டனர். நிகழ்ச்சியின் போது, பாரதியாரின் பாடல்களும் இசைக்கப்பட்டன.

-----------------------

*ரங்கசாமி-உதவி* (11)

புதுச்சேரியில் இவ்வாண்டு ஜனவரி 21ஆம் தேதி, கடல் அலையில் சிக்கி உயிரிழந்த முருங்கப்பாக்கம் இளைஞர் ஜெகதீஷின் பெற்றோர்களுக்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று, முதலமைச்சரின் நிவாரண நிதியில் இருந்து, 5 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கினார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, சட்டமன்ற உறுப்பினர் திரு. சம்பத் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

இதேபோல, கிருமாம்பாக்கம் வள்ளுவர் மேடு கடற்கரையில், கடந்த ஆண்டு மார்ச் 5ஆம் தேதி, ராட்சத அலையில் சிக்கி உயிரிழந்த புஷ்பராஜன்-கிஷோர் ராஜன் சகோதரர்களின் பெற்றோர்களுக்கும், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, முதலமைச்சரின் நிவாரண நிதியில் இருந்து, 4 லட்சம் ரூபாய் நிதி

உதவி வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் திரு. செந்தில்குமார் உடன் இருந்தார்.

-----------------------

*காரைக்கால்-மின்சாரம்(9)*

புதுச்சேரி மின்திறல் வரைநிலைக் கழகத்தின் கீழ், காரைக்காலில் செயல்படும் எரிவாயு அடிப்படையிலான 32.5 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம், 2021-22ஆம் ஆண்டில் ஈட்டிய லாபத்தில் இருந்து, புதுச்சேரி அரசுக்கு, 6 கோடியே 90 லட்சம் ரூபாய் ஈவுத் தொகை வழங்கி உள்ளது. இதற்கான காசோலையை, மாநில உள்துறை மற்றும் மின் துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம் இன்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமியிடம் வழங்கினார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, சட்டமன்ற உறுப்பினர் திரு. நாக தியாகராஜன், மற்றும், புதுச்சேரி மின் திறல் வரைநிலைக் கழக அதிகாரிகள் உடன் இருந்தனர்.

-----------------------

*காரைக்கால்* (13)

புதுச்சேரி கலை-பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு. திருமுருகன், காரைக்காலில், ஓய்வு பெற்ற ஆசிரியர் கலைமாமணி ராஜேந்திரன் நடத்தி வரும் ஓவியப் பள்ளியில் பயின்ற மாணவர்களின் ஓவியக் கண்காட்சியை திறந்து வைத்து, படைப்புகளை பார்வையிட்டார். இத்தகைய முயற்சிகளுக்கு அரசு உறுதுணையாக இருக்கும் என அவர் உறுதி அளித்தார்.

காரைக்கால் மாவட்டம் திருப்பட்டினம் அரசு உயர்நிலைப் பள்ளியில், 12ஆம் வகுப்பு முடித்து, புதுச்சேரி இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் படிப்பிற்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள ஏழை மாணவி தேன்மொழியின் படிப்புச் செலவுகளுக்காக, அரசு அதிகாரிகளிடம் இருந்து திரட்டப் பட்டுள்ள 80 ஆயிரம் ரூபாயை, காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு. மணிகண்டன், மாணவியின் பெற்றொர்களிடம் வழங்கினார். மாணவி நன்கு படித்து, காரைக்கால் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்றும், ஏழைகளுக்கு மருத்துவ சேவை வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

-----------------------

*ஏனாம் (10)*

கோதாவரி ஆற்றின் நீர்பிடிப்புப் பகுதிகளில், பெய்த கனமழைக் காரணமாக, ஆந்திர மாநிலம் தௌலேஸ்வரம் அணையில் இருந்து விடுவிக்கப்படும் நீரின் அளவு, நேற் று இரவு முதல் வினாடிக்கு 14 லட்சம் கனஅடியாக உயர்த்தப் பட்டுள்ளதால், ஏனாம் கோதாவரி ஆற்றில், திடீர் வெள்ளம் ஏற்பட்டு உள்ளதாகவும், தாழ்வான பகுதியான பிரான்ஸ்திப்பா பகுதியில் உள்ள மக்களை, வருவாய் துறை அதிகாரிகள் உஷார்படுத்தி இருப்பதாகவும் எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார். ஏனாம் மண்டல நிர்வாக அதிகாரி திரு. முனுசாமி, நிலவரங்களை தொடர்ந்து கண்கார ணித்து வருகிறார். கோதாவரி ஆற்றில் வெள்ளம், 2 நாட்களுக்கு நீடிக்கலாம் என ஏனாம் பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

-----------------------

*காந்தி-ரயில்* (14)

ரயில் மூலம் மகாத்மா காந்தி மேற்கொண்ட பயணங்களின் போது, அவர் சந்தித்து மனிதர்கள் மற்றும் அவருக்கு ஏற்பட்ட அனுபவங்களை சித்தரிக்கும் வகையில், ரயில்வே அமைச்சகம் தயாரித்து, சுற்றுலா அமைச்சகத்திற்கு நன்கொடையாக வழங்கி உள்ள பிரத்யேக ரயில் பெட்டியை, இன்று புதுடெல்லி ராஜ்காட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய கலாச்சார மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தொடக்கி வைத்தார். மகாத்மா காந்தியின் அஹிம்சை கொள்கை, நடப்பு பூகோள-அரசியல் நிலைமைகளிலும், உலகம் முழுவதற்கும் பொருந்தும் வகையில் அமைந்து இருப்பதாக அவர் கூறினார். பாதுகாப்பு, தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில், மகாத்மா காந்தியின் சுயசார்புக் கொள்கைகளையே அரசு பின்பற்றுவதாக அவர் தெரிவித்தார். பருவநிலை மாற்றம், உலகின் முக்கிய பிரச்சனையாக உருவெடுத்துள்ள நிலையில், மக்கள் அனைவரும், மகாத்மா காந்தியின் கொள்கைகளை பின்பற்றி, இயற்கை, மற்றும், மரங்களை பாதுகாக்க வேண்டும் என அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

-----------------------

*ஒப்பந்தம்* (11)

செயற்கை நுண்ணறிவு வசதிகள் மூலம், ஆயுஷ்மான் பாரத் சுகாதார இயக்கத்தை மேம்படுத்துவதில் தேசிய சுகாதார ஆணையம், கான்பூர்-ஐஐடி உயர்கல்வி நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட உள்ளது. இதற்கு ஏதுவாக, டிஜிட்டல் பொது நன்மைக்கான செயற்கை நுண்ணறிவு வசதிகளை

மேம்படுத்துவது குறித்து, இவ்விரு அமைப்புகளுக்கும் இடையே, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. புதுடெல்லியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மத்திய சுகாதாரத் துறைச் செயலர் திரு. அபூர்வ சந்திரா பேசுகையில், செயற்கை நுண்ணறிவு அடிப்படையில், சுகாதாரத் துறையில் செயல்படும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கான பொது மேடை அமைத்துக் கொடுப்பதாக இந்த ஒப்பந்தம் திகழும் என்றார். கான்பூர்-ஐஐடி இயக்குநர் திரு மணீந்திர அகர்வால் உள்ளிட்டோர் இந்நிகழச்சியில் கலந்து கொண்டனர்.

----------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

உலகின் செமி கண்டக்டர் கேந்திரமாக மேம்பட, இந்தியா அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பசுமை ஹைட்ரஜன் மூலம் கார்பன் வெளியீட்டைக் குறைப்பதில், சர்வதேசக் கூட்டாண்மை அவசியம் என்றும் பிரதமர் வலியுறுத்தி உள்ளார்.

மத்திய மீன்வளத் துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங், இன்று புதுடெல்லியில், மீனவர் நலனுக்கான, பிரதமரின் மத்ஸ்ய கிசான் சம்ரித்தி சஹ யோஜனா திட்டத்தை தொடக்கி வைத்தார்.

பாரதியார் நினைவு நாளான இன்று புதுச்சேரியில், அன்னாரின் சிலைக்கு, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி உள்ளிட்டோர், அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.